வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி-20.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

- இன்று முதல், ஜம்மு-காஷ்மீருக்கு, 2 நாள் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை ஸ்ரீநகரில், சர்வதேச யோகா தின விழாவில் பங்கேற்கிறார்.

- உடல் நலம்-மனநலம் இரண்டையும் சேர்த்து வழங்கும் யோகாவை அனைவரும் பயில வேண்டும் என, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

- புதுச்சேரியில் மீனவ குடும்பங்களுக்கு, தலா 6 ஆயிரத்து 500 ரூபாய் வீதம், மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

- புதுச்சேரியில் தரமான காய்கறி மற்றும் மலர் விதைகளை, 50 சதவிகித மானிய விலையில் பெற, விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என, தோட்டக் கலை துறை அறிவித்துள்ளது.

மோடி-ஸ்ரீநகர்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று முதல், ஜம்மு-காஷ்மீருக்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். 10-ஆவது சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, நாளை ஸ்ரீநகரில் நடைபெற உள்ள யோகா நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்கிறார். மூன்றாம் முறை பிரதமராக பதவி ஏற்ற பின்னர் திரு

நரேந்திர மோடி ஜம்மு-காஷ்மீர் செல்வது இதுவே முதல் முறையாகும். அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் ஜம்மு-காஷ்மீரில் இதுவரை இல்லாத அளவில் 35 சதவிகித வாக்குகள் பதிவானதன் பின்னணியில், பிரதமரின் ஜம்மு-காஷ்மீர் பயணம் முக்கியத் துவம் பெறுகிறது.

ஸ்ரீநகரில் உலகப் புகழ்பெற்ற தால் ஏரிக் கரையில் நாளை நடைபெற உள்ள யோகா அமர்வில் சுமார் 7 ஆயிரம் பேர் பங்கேற்க உள்ளனர். 10-ஆவது யோக தின கொண்டாட்டங்களுக்கு ஸ்ரீநகரை தேர்வு செய்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை ஸ்ரீநகரில் நடைபெறும் விழாவில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இந்த அனைத்து 84 திட்டங்களின் மொத்த மதிப்பு ஆயிரத்து 500 கோடி ரூபாயாகும். ஜம்மு-காஷ்மீரில், வேளாண்மை மற்றும் இதர துறைகளுக்கான, ஆயிரத்து 800 கோடி ரூபாய் போட்டித் திறன் மேம்பாட்டுத் திட்டத்தையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார். இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் ஜம்மு-காஷ்மீரில் மாற்றம் கொண்டு வருதல் என்ற தலைப்பில் ஸ்ரீநகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்கிறார். அரசுத் துறைகளில் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுமார் 2 ஆயிரம் பேருக்கு, நாளைய தினம் நியமனக் கடிதங்களை பிரதமர் வழங்குகிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் வருகையை ஒட்டி, காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதிலும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*மோ□டி-இந்தோனேசியா*

இந்தோனேசிய அதிபர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள திரு பிரபாவோ சுபியான்டோ-விடமிருந்து தொலைபேசியில் வாழ்த்து அழைப்பு பெற்றது குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். கலாச்சார பிணைப்புகளின் அடிப்படையில் இருநாடுகளுக்கும் இடையிலான, விரிவான கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கான வழி வகைகள் குறித்து தாங்கள் இருவரும் விவாதித்ததாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்தோனேசிய அதிபர் பதவியில் திரு சுபியான்டோ வெற்றி பெற தாம் வாழ்த்தியதாகவும் அவர் கூறி உள்ளார்.

*ஜவுளித் துறை*

மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் இன்று புதுடெல்லியில், ஜவுளி தொழில் கவுன்சில் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார். ஜவுளித் துறையின் பிரச்சனைகளையும், இத்துறையை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் அவர் கேட்டறிந்தார். ஜவுளித் துறை இணை அமைச்சர் திரு பபித்ர மார்கரீட்டா மற்றும் அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

*யோகா-□ாதா*

மனிதர்களுக்கு உடல் நலத்தைப் போலவே மனநலமும் அவசியம் என்பதால், இந்த இரண்டையும் சேர்த்து வழங்கும் யோகாவை அனைவரும் பயில வேண்டும் என புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார். சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு இன்று எமது செய்தியாளருக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார். உலகிற்கு இந்தியா வழங்கிய சிறந்த கொடை யோகா என்றும், ஞானிகள் மற்றும் ரிஷிகள் உருவாக்கிய யோகக் கலையை உலகம் முழுவதும் கொண்டாடும் நிலைக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி எடுத்துச் சென்றுள்ளதாகவும் துணை நிலை ஆளுநர் தெரிவித்தார்.

*புதுச்சேரி-யோகா விழா*

புதுச்சேரியில் சுற்றுலா, கல்வி, ஆயுஷ் உள்ளிட்ட துறைகள் சார்பில், கடற்கரை சாலை காந்தி திடலில் நாளை காலை 7 மணிக்கு நடைபெற உள்ள 10-ஆவது சர்வதேச யோகா தின விழாவை, துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் தொடக்கி வைக்கிறார். முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில், சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம் உள்ளிட்டோர் முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில் தலைமைச்

செயலர் திரு சரத் சவ்கான் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர்.

*புதுச்சேரி-மீன்வளம்*

புதுச்சேரியில் முதல் கட்டமாக, 18 ஆயிரத்து 779 மீனவ குடும்பங்களுக்கு, தலா 6 ஆயிரத்து 500 ரூபாய் வீதம், மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். மீன்வளத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி-திரு லட்சுமி காந்தன, மற்றும் மீன்வளத் துறை செயலர் திரு நெடுஞ்செழியன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்க புதுச்சேரி அரசு 12 கோடியே 20 லட்சத்து 63 ஆயிரத்து 500 ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பதாக மீன்வளத் துறை அமைச்சர் அலுவலகத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ரங்கசாமி-வாழ்த்து*

இன்று பிறந்த நாள் காணும் குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்முவிற்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, நல்ல உடல் நலமும், நீண்ட ஆயுளும் பெற்று இன்னும் பல ஆண்டுகள் நாட்டிற்கு

சேவை புரிய இறைவன் அருளட்டும் என்று, புதுச்சேரி மக்கள் சார்பிலும், சொந்த முறையிலும் வாழ்த்துவதாக குடியரசு தலைவருக்கு அனுப்பி உள்ள செய்தியில் அவர் கூறி உள்ளார். நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் குடியரசு தலைவருக்குள்ள உறுதிப்பாடு பாராட்டத் தக்கது என்றும், இதனால் நாம் அனைவருமே உணர்வூக்கம் பெறுவதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி-கூட்டம்*

புதுச்சேரி இந்திராகாந்தி அரசுப் பொது மருத்துவமனையில் நோயாளிகள் நலக் குழுவின் 6-ஆவது ஆட்சி மன்றக் கூட்டம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் ஆகியோர் முன்னிலையில் இன்று நடைபெற்றது. மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு ஆட்சி மன்றக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.

*தோட்டக் கலை*

புதுச்சேரியில் காய்கறி மற்றும் மலர் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், தரமான காய்கறி மற்றும் மலர் விதைகளை, 50 சதவிகித மானிய விலையில் வழங்க தோட்டக் கலை துறை திட்டமிட்டுள்ளது. கொடி வகை காய்கறி சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் நிரந்தரப் பந்தல் அமைத்துக் கொள்ள, அதிகபட்சம் ஏக்கருக்கு 1 லட்சம் ரூபாய் வரை, 50 சதவிகித பின்செய் மானியம் வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. விவசாயிகள் ஜூலை 20-ஆம் தேதிக்குள் இத்திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என

தோட்டக் கலைத் துறைக்கான கூடுதல் வேளாண் இயக்குநர் திரு சிவராமன் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். விண்ணப்ப படிவங்களை தாவரவியல் பூங்காவில் உள்ள தோட்டக்கலை துறை அலுவலகம் மற்றும் அந்தந்த கிராமப் பகுதியில் உள்ள உழவர் உதயகங்களில் பெற்றுக் கொள்ளலாம், அல்லது வேளாண் துறையின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*யோகா-புதுச்சேரி*

மத்திய தகவல்- ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் புதுச்சேரியில் செயல்படும் **மத்திய மக்கள் தொடர்பகம்**, புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் விளையாட்டு மற்றும் உடற்கல்வி துறையுடன் இணைந்து நாளை 10-ஆவது சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது. நமக்கும் சமூகத்திற்குமான யோகா என்ற மையக் கருத்து அடிப்படையில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உள் விளையாட்டு அரங்கில் நாளை காலை நடைபெற உள்ள சர்வதேச யோகா விழாவை, பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் தரணிக்கரசு தொடக்கி வைக்கிறார். பல்கலைக் கழகத்தின், கலாச்சாரம் மற்றும் கலாச்சார உறவுகள் துறை இயக்குநர் **பேராசிரியர் கிளமண்ட் லூர்தஸ்** சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

கருணைத் தொகை

கள்ளக்குறிச்சி விஷ சாராய சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசு தலா 10 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளது. விஷ சாராயயம் அருந்தியதால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது. விஷ சாராய சம்பவத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அதிர்ச்சியும், துயரமும் வெளியிட்டுள்ளார். கள்ளச் சாராய விற்பனை பிரச்சனையில் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சம்பவம் குறித்து இன்று சென்னையில், மூத்த அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். முறைகேடுகளை ஆராய விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதற்கிடையே கள்ளக்குறிச்சி விஷச் சாராய சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை இன்று 35-ஆக அதிகரித்துள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்டு புதுச்சேரி ஜிப்மரில் அனுமதிக்கப்பட்ட 15 பேரில் மூவர் சிகிச்சை பலன் இன்றி உயிர் இழந்தனர். பாதிக்கப்பட்ட மேலும் சுமார் 100 பேர் ஜிப்மர் உட்பட பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சையில் உள்ளனர்.

*அரியானா*

அரியானா மாநிலம் பானிப்பட் மருத்துமனை ஒன்றில், நோயாளி ஒருவருக்கு வலது காலுக்கு பதிலாக இடது காலில் தவறாக மூட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தானாகவே நடவடிக்கை மேற்கொண்டு, மாநில அரசின் தலைமைச் செயலர் மற்றும் காவல் துறை தலைவருக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது. பிரச்சனை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு குறித்து இரு அதிகாரிகளும் ஒரு வார காலத்திற்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நோயாளி, பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் ஜன் ஆரோகியா திட்ட பயனாளியாக இருந்தும் மருத்துவமனை நிர்வாகம் அவரிடம் கட்டணம் வசூலித்ததாகவும் ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டது.

*நெடுஞ்சாலை*

நீட் நுழைவுத் தேர்வுக்கான கேள்வித் தாள் முன்கூட்டியே வெளியானதாக கூறப்படும் பிரச்சனையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள், தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் பாட்னா விருந்தினர் இல்லத்தில் தங்கியதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை ஆணையம் மறுத்துள்ளது. பட்னாவில் தங்களுக்கு விருந்தினர் இல்லம் எதுவும் இல்லை என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

பூபேந்தி□யாதவ்

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ், இன்று முதல், உத்தராகண்டில் 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார். உத்தராகண்டில் காட்டுத் தீயால் பாதிக்கப்பட்ட தேரி மற்றும் நரேந்திர நகர் வனப் பகுதிகளை இன்று அவர் பார்வையிட்ட பின்னர் நாளை சர்வதேச யோகா தினத்தன்று, டேராடூனில் உள்ள இந்திராகாந்தி தேசிய வனவளக் கல்லூரியில் பயிற்சி அதிகாரிகளுடன் இணைந்து யோகா அமர்வில் கலந்து கொள்கிறார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இன்று முதல், ஜம்மு-காஷ்மீருக்கு, 2 நாள் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை ஸ்ரீநகரில், **சர்வதேச யோகா தின விழாவில்** பங்கேற்கிறார்.

**உடல் நலம்-மனநலம்** இரண்டையும் சேர்த்து வழங்கும் யோகாவை அனைவரும் பயில வேண்டும் என, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் மீனவ குடும்பங்களுக்கு, தலா 6 ஆயிரத்து 500 ரூபாய் வீதம், **மீன்பிடி தடைக்கால நிவாரணம்** வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் தரமான **காய்கறி மற்றும் மலர் விதைகளை**, 50 சதவிகித மானிய விலையில் பெற, விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என, தோட்டக் கலை துறை அறிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------